(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 6(8).]

# பாராளுமன்றம்

## 6 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2012 செத்தெம்பர் 21 வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டது

## 2012 ஒற்றோபர் 09, செவ்வாய்க்கிழமை

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*

கைத்தொழில், வாணிப அமைச்சர்,— இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.1),— 1979ஆம் ஆண்டின் 40ஆம் இலக்க இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் 14(1) ஆம் பிரிவின் கீழ் செஸ் வரி தொடர்பில் நிதி திட்டமிடல் அமைச்சரின் உடன்பாட்டுடன் கைத்தொழில் மற்றும் வாணிப அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2012 ஜூன் மாதம் 13ஆம் திகதிய 1762/29ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2012.09.18ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

கைத்தொழில், வாணிப அமைச்சர்,— இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.2),— 1979ஆம் ஆண்டின் 40ஆம் இலக்க இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் 14(1) ஆம் பிரிவின் கீழ் செஸ் வரி தொடர்பில் நிதி திட்டமிடல் அமைச்சரின் இணக்கப்பாட்டுடன் கைத்தொழில் மற்றும் வாணிப அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2012 ஜூன் மாதம் 27ஆம் திகதிய 1764/5 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2012.09.18ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

சிவில், விமான சேவைகள் அமைச்சர்,— சிவில் விமானப் போக்குவரத்துச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2002ஆம் ஆண்டின் 34ஆம் இலக்க சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபைச் சட்டத்தின் 39(ஆ) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2010 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சிவில் விமானப் போக்குவரத்துச் சட்டத்தின் 117ஆம் பிரிவின் கீழ் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2012 சனவரி மாதம் 25 ஆம் திகதிய 1742/19ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2012.09.20ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

# 2012 ஒற்றோபர் 23, செவ்வாய்க்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

1883/ '11

கௌரவ புத்திக பத்திரண,— நீர் வழங்கல், வடிகாலமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அம்பாந்தோட்டை மாவட்டத்திலுள்ள ஹுங்கம கஜமன்கம உயர்த்திய நீர் வழங்கல் திட்டத்தின் நிர்மாணிப்புப் பணிகள் இடைநடுவே நிறுத்தப்பட்டுள்ளதென்பதையும்;

(ii) இதனால் மேற்படி பிரதேசத்தின் மக்கள் கடும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர் என்பதையும்

அவர் ஏற்றுக் கொள்வாரா?

(ஆ) (i) மேற்படி கருத்திட்டத்தின் நிர்மாணிப்புப் பணிகளை துரிதமாக மேற்கொள்வதற்கு நடவடிக்கையெடுப்பாரா என்பதையும்;

(ii) அதற்கான நிதி ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், நிர்மாணிப்புப் பணிகள் ஆரம்பிக்கப்படும் திகதி யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2147/ '11

கௌரவ தயாசிறி ஜயசேகர,— நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாஹோ பிரதேச செயலாளர் ஆளுகைப் பிரதேசத்தில் மாஹோ நகரத்தின் நீர்த் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக 2005ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் நிர்மாணிக்கப்பட்ட மாஹோ நீர் வழங்கல் திட்டம் மக்களுக்கு உரிமை கையளிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) அதன் கொள்ளளவு யாதென்பதையும்;

(iii) அதன் கீழ் பயனடையும் குடும்பங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி நீர் வழங்கல் திட்டத்திற்காக மதிப்பீடு செய்யப்பட்ட பணத் தொகை மற்றும் செலவிடப்பட்ட பணத் தொகை வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) குறித்த நிர்மாணத்தை மேற்கொண்டவர்கள் யாவர் என்பதையும்;

(iii) அதற்காக நிதி ஒதுக்கீடு செய்தவர்கள் யாவர் என்பதையும்;

(iv) அதன் தற்போதைய நிலை யாதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2195/ '11

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும் கேட்பதற்கு,— (1)

(அ) கடந்த ஐந்து வருடங்களில் லங்கா புத்ர அபிவிருத்தி வங்கியின்,

(i) பயன்படுத்தப்பட்ட மொத்த மூலதனம் மற்றும் ஒதுக்கங்களையும்;

(ii) உரிமை முதல் மீதான வருவாய் மற்றும் சொத்துக்கள் மீதான வருவாயையும்;;

(iii) பணியாட்டொகுதியினரின் மொத்த எண்ணிக்கை மற்றும் ஒரு ஊழியருக்கான செலவையும்;

(iv) மேற்குறிப்பிட்ட தகவல்களை ஒரு தனியார் துறை வங்கி நிறுவனத்தோடு ஒப்பு நோக்கியும்;

(v) அரசாங்கத்திற்கு விதிப்பனவுகளாகவும் தீர்வைகளாகவும் செலுத்தப்பட்ட மொத்தத் தொகையையும்;

(vi) இலாபம் அல்லது நட்டம் எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2225/ '12

கௌரவ சஜித் பிரேமதாச,— நிர்மாண, பொறியியல் சேவைகள், வீடமைப்பு, பொது வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மஹிந்த சிந்தனை தொலை நோக்குக் கொள்கைகளில் "සැමට නිවසක් - හිතට සෙවණක්" வேலைத் திட்டத்தின் கீழ், பல்கலைக்கழக சமூகத்தினரின் குடியிருப்புத் தேவையை பூர்த்தி செய்வதற்காக 5000 வீடுகளை அந்தந்த பல்கலைக்கழகங்களுக்கு அருகில் நிர்மாணிப்பதற்கு அல்லது அதற்குப் பொருத்தமான காணித்துண்டை வழங்குவதற்குத் தேவையான நிதி ஏற்பாட்டினை ஒதுக்குவதாக வாக்குறுதி அளிக்கப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி நிகழ்ச்சித்திட்டத்துக்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், ஒதுக்கப்பட்ட மொத்தப் பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி நிதி ஏற்பாடானது வீடுகளை நிர்மாணிப்பதற்காகவா அல்லது காணித்துண்டுகளை வழங்குவதற்காகவா ஒதுக்கப்பட்டுள்ளது என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2293/ '12

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(ஆ) யுத்த வெற்றியின் பின்னர் வடக்கு கிழக்கு பிரதேசங்களின் கல்வி அபிவிருத்திக்காக அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதை குறிப்பிடுவாரா?

(ஆ) யுத்தத்திற்குப் பின்னர் வடக்கு கிழக்கு பிரதேசங்களின் கல்வி அபிவிருத்திக்காக,

(i) உதவி வழங்கிய வெளிநாட்டு நிறுவனங்கள் மற்றும் அரச சார்பற்ற அமைப்புக்கள் யாவை என்பதையும்;

(ii) ஒவ்வொரு நிறுவனம் மூலமாக வழங்கப்பட்டுள்ள நிதி ரீதியான உதவிகளின் பெறுமதி ஆண்டுவாரியாக தனித்தனியாக யாவை என்பதையும்;

(iii) 2009—2012 வரை அரசாங்கத்தினால் ஆண்டு வாரியாக மேற்கொள்ளப்பட்ட நிதியேற்பாட்டு ஒதுக்கீடுகள் சம்பந்தப்பட்ட கருத்திட்டங்களுக்கிணங்க தனித்தனியாக யாவை என்பதையும்

அவர் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2490/ '12

கௌரவ ரஞ்சன் ராமநாயக்க,— வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு, நலநோம்புகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) கொஸ்கமையைச் சேர்ந்த திருமதி வை.எச். மினோலி சவூதி அரேபியாவின் ரியாத் நகரத்தில், அர்கா பெலஸில் சேவையில் ஈடுபட்டிருக்கையில் மரணித்துள்ளார் என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) திருமதி மினோலியின் மரணத்துக்கான காரணம் தற்போது வெளிவந்துள்ளதா என்பதையும்;

(ii) மேற்படி காரணம் பிரேத பரிசோதனை அறிக்கையின் மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) இவரது மரணம் சார்பில் இழப்பீட்டு பணமோ அல்லது ஏதேனும் கொடுப்பனவோ அவரது கணவர் உள்ளிட்ட உறவினர்களுக்கு பெற்றுக் கொடுப்பதற்கு தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2492/ '12

கௌரவ கயந்த கருணாதிலக்க,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) புவிச்சரிதவியல் அளவை, சுரங்க பணியகத்தினால் எல்பிட்டிய பிரதேச செயலக ஆளுகைப் பிரதேசத்தினுள் மணல் அகழ்வதற்கு உரிமப் பத்திரம் வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், வழங்கப்பட்டுள்ள உரிமப் பத்திரங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) மேற்படி உரிமப் பத்திர உரிமையளர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவையென்பதையும்;

(iv) இவர்களுக்கு மணல் அகழ்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ள இடங்கள் யாவையென்பதையும்;

(v) மேற்படி உரிமப் பத்திர உரிமையாளர்கள் மணல் அகழ்வின் போது பின்பற்ற வேண்டிய நிபந்தனைகள் உள்ளனவா என்பதையும்;

(vi) ஆமெனில் அவை யாவையென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2524/ '12

கௌரவ அனுர திஸாநாயக்க,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2011ஆம் ஆண்டில் முதலாம் ஆண்டுக்கு பாடசாலைப் பிள்ளைகளைச் சேர்த்துக்கொள்ளல், பாடப் புத்தகங்களைப் பகிர்ந்தளித்தல், சீருடைகளைப் பகிர்ந்தளித்தல், 5ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்குச் சான்றிதழ்களை வழங்குதல் மற்றும் நிறைவான பாடசாலைகள் கருத்திட்டத்தை ஆரம்பித்தல் ஆகிய விடயங்களுடன் தொடர்பான ஒவ்வொரு தேசிய விழாவும்,

(i) நடத்தப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) நடத்தப்பட்ட இடம் யாதென்பதையும்;

(iii) நடத்த செலவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவென்பதையும்

வெவ்வேறாக அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேலே (அ) இல் குறிப்பிடப்பட்ட சகல தேசிய விழாக்களையும் நடத்த செலவிடப்பட்ட மொத்தப் பணத்தொகை எவ்வளவு என்பதையும்;

(ii) அந்தப் பணம் எவ்வாறு பெறப்பட்டது என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2546/ '12

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— பிரதம அமைச்சரும் பௌத்தசாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2009ஆம் ஆண்டிலிருந்து இற்றை வரை இலங்கை இராணுவத்திற்கு, விமானப் படைக்கு மற்றும் கடற்படைக்கு உணவு வழங்கலை மேற்கொள்கின்ற ஆட்களும் நிறுவனங்களும் தனித்தனியாக யாவை என்பதையும்;

(ii) மேற்படி ஆட்களையும் நிறுவனங்களையும் தெரிவு செய்கையில் கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டனவா என்பதையும்;

(iii) ஆமெனில், இதற்காக கேள்விப் பத்திரங்களைச் சமர்ப்பித்த ஆட்களும் நிறுவனங்களும் யாவையென்பதையும்;

(iv) மேற்படி ஒவ்வொரு நிறுவனமும் சமர்ப்பித்த விலைகள் யாவையென்பதையும்;

(v) தெரிவுசெய்யப்பட்ட ஆட்கள் மற்றும் நிறுவனங்கள் சமர்ப்பித்த விலைகள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2850/ '12

கௌரவ அஜித் பி. பெரேரா,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) சம்பா மற்றும் நாட்டரிசி ஒரு கிலோவுக்கு தற்போது செலுத்தப்படும் அரசாங்கத்தின் உத்தரவாத விலைகள் தனித்தனியாக எவ்வளவென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) தற்போது ஒரு கிலோ நெல் உற்பத்தி செய்வதற்காக ஏற்படும் செலவினம் எவ்வளவென்பதையும்;

(ii) இச் செலவினம் கணிப்பிடப்படும் முறையியல் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) உற்பத்திச் செலவுக்கு ஒப்பீட்டளவில் ஒரு கிலோ நெல்லுக்காக போதியளவு உத்தரவாத விலையை விவசாயிகளுக்கு வழங்குவாரா என்பதையும்;

(ii) இன்றேல், நெல் கொள்வனவு செய்யப்படும் உத்தரவாத விலையை அதிகரிப்பதற்காக எடுக்கப்படும் எதிர்கால நடவடிக்கை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2883/ '12

கௌரவ மனுஷ நாணாயக்கார,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2012 ஆம் ஆண்டில் காலி கல்வி வலயத்தில் அமைந்துள்ள தேசிய பாடசாலைகளில்,

(i) முதலாம் தரம் முதல் பதின்மூன்றாம் தரம் வரையிலான வகுப்புகளில் கல்வி கற்கின்ற மாணவர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு வகுப்பின் அடிப்படையில் தனித்தனியே எவ்வளவு என்பதையும்;

(ii) முதலாம் தரத்திற்கு நேர்முகப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களைத் தவிர, வேறு மாணவர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளார்களா என்பதையும்;

(iii) முதலாம் தரத்திற்கு அவ்வாறு அனுமதிக்கப்பட்டுள்ள மேற்படி மாணவர்கள் யாவர் என்பதையும்;

(iv) முதலாம் தரத்தைத் தவிர, வேறு தரங்களுக்கும் மாணவர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளார்களா என்பதையும்;

(v) ஏனைய தரங்களுக்கு அனுமதிக்கப்பட்டுள்ள மேற்படி மாணவர்கள் யாவர் என்பதையும்

தனித்தனியே அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி பாடசாலைகளுக்கு நேர்முகப் பரீட்சைகளில் சித்தியடைகின்ற மாணவர்களைத் தவிர, வேறு மாணவர்களை அனுமதிப்பதற்கு அதிகாரமளிக்கின்ற சட்டரீதியான ஆவணங்கள் உள்ளனவா என்பதையும்;

(ii) மேற்படி ஆவணங்களை இச்சபையில் சமர்ப்பிப்பாரா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1884/ '11

கௌரவ புத்திக பத்திரண,— சுதேச மருத்துவத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மாத்தறை மாவட்டத்தின் முலட்டியன பிரதேச சபை அலுவலக வளவில் அமைந்துள்ள ஆயுர்வேத மருத்துவசாலையில் நிலவுகின்ற மருந்துப் பொருட்கள் பற்றாக்குறையினால் பிரதேசத்திலுள்ள மக்கள் கடும் சிரமங்களுக்கு உள்ளாகியுள்ளனரென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி மருத்துவசாலையில் நிலவுகின்ற மருந்துப் பொருட்கள் பற்றாக்குறையை துரிதமாக நீக்குவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அதற்காக எடுக்கும் காலம் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பார?

(இ) இன்றேல், ஏன்?

2148/ '11

கௌரவ தயாசிறி ஜயசேகர,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தேசிய லொத்தர் சபைக்கு 2005ஆம் ஆண்டு தொடக்கம் இற்றை வரை ஆட்சேர்க்கப்பட்டுள்ள பதவியணியினரின் எண்ணிக்கை வருட வாரியாக வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) மேற்படி நிறுவனத்திற்கு அங்கீகரிக்கப்பட்டுள்ள பதவியணியினர் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) தற்போது அங்கு நிலவுகின்ற ஊழியர் மிகை அல்லது ஊழியர் பற்றாக்குறை யாதென்பதையும்;

(iv) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கையை விஞ்சுகின்ற வகையில் ஆட்சேர்க்கப்பட்டிருப்பின் அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(v) மிகையாக பணியாட்களை ஆட்சேர்ப்பதற்கு அங்கீகாரம் வழங்கிய அதிகாரியின் பெயர் மற்றும் பதவி யாதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2196/ '11

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிர்மாண, பொறியியல் சேவைகள், வீடமைப்பு, பொது வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரசாங்கத்தால் 2011 ஆம் ஆண்டு கொழும்பு மாவட்டத்தில் நிர்மாணிக்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கையையும்;

(ii) 2012 ஆம் 2013 ஆம் 2014 ஆம் ஆண்டுகளில் நிர்மாணிக்க உத்தேசிக்கப்பட்டுள்ள வீடுகளின் எண்ணிக்கையையும்;

(iii) மேற்குறிப்பிட்ட வீடுகளின் நிர்மாணத்திற்கு ஒதுக்கப்பட்ட பணத்தின் அளவையும்

அவர் கூறுவாரா?

(ஆ) (i) புதிதாக கட்டப்பட்ட வீடுகள் இலவசமாக வழங்கப்படுகின்றனவா என்பதையும்;

(ii) இன்றேல் அவ்வீடுகள் கிரயத்திற்கு விற்கப்படுகின்ற அல்லது குத்தகைக்கு விடப்படுகின்ற விலையையும்;

(iii) அவ்வீடுகள் எவ் அடிப்படையில் ஒதுக்கப்படுகின்றன என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2226/ '12

கௌரவ சஜித் பிரேமதாச,— நிர்மாண, பொறியியல் சேவைகள், வீடமைப்பு, பொது வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மஹிந்த சிந்தனை தொலை நோக்குக் கொள்கைகளில் "සැමට නිවසක් - හිතට සෙවණක්" வேலைத் திட்டத்தின் கீழ், ஜல்தர, எட்மன்டன் மற்றும் ரொரிங்டன் வீடமைப்புத் திட்டங்கள் போன்று அரச ஊழியர்களுக்கான 25 வீடமைப்புத் திட்டங்கள் அனைத்து மாவட்டங்களிலும் பிரதான நகரத்தை அடிப்படையாகக் கொண்டு அம்மாவட்டத்தில் சேவையாற்றும் வீடுகளற்ற அரச மற்றும் அரச கூட்டுத்தாபன ஊழியர்களுக்காக ஆரம்பிக்கப்படுவதாக வாக்குறுதி அளிக்கப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி வாக்குறுதிக்கமைய வீடமைப்புக் கருத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு யாதென்பதையும்;

(ii) இன்றளவில் வீடமைப்புக் கருத்திட்டங்கள் நிர்மாணிக்கப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டுள்ள நகரங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iii) அந்நகரங்கள் யாவையென்பதையும்;

(iv) நிர்மாணப் பணிகள் பூர்த்தி செய்யப்பட்ட வீடுகளில் குடியமர்த்தப்பட்டுள்ள அரச மற்றும் அரச கூட்டுத்தாபன ஊழியர் குடும்பங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## 2012 ஒற்றோபர் 24, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1885/ '11

கௌரவ புத்திக பத்திரண,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அம்பாந்தோட்டை மாவட்டத்தின் திஸ்ஸமஹாராம மாவட்ட வைத்தியசாலையில் நிர்மாணிக்கப்பட்டுள்ள மூன்றுமாடி கட்டடம் பயன்படுத்தப்படாது கைவிடப்பட்டுள்ளதென்பதையும்;

(ii) மேற்படி கட்டடம் திறந்து வைக்கப்பட்ட போதிலும் அதற்குத் தேவையான உபகரணங்கள் வழங்கப்படாமையினால் பயன்படுத்தப்படாது கைவிட நேர்ந்துள்ளதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) ஆமெனில்,தேவையான உபகரணங்களை துரிதமாக வழங்கி கட்டடத்தை பொதுமக்கள் பயன்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வாரா என்பதையும்;

(ii) தேவையான உபகரணங்கள் வழங்கப்படுமெனில் அத் திகதி யாதென்பதையும்;

(iii) அதற்குத் தேவையான நிதி ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், அப் பணத்தொகை எவ்வளவென்பதையும்;

(v) பொதுமக்களது பயன்பாட்டுக்காக மேற்படி கட்டடம் மீண்டும் திறக்கப்படுவது எப்போதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2109/ '11

கௌரவ ஜோன் அமரதுங்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (5)

(அ) (i) கலதாரி ஹோட்டல் லங்கா பிஎல்சி, லாப்ஸ்கேஸ் (Laugh Gas) பிஎல்சி மற்றும் சிலோன் கிரைன் எலிவேடர்ஸ் (Ceylon Grain Elevators) ஆகியவற்றில் ஊழியர் சேமலாப நிதியம் கொண்டுள்ள பங்குகளின் எண்ணிக்கையையும்;

(ii) பங்குகளின் தொகுதி ஒவ்வொன்றும் கொள்வனவு செய்யப்பட்ட திகதிகளையும்;

(iii) மேற்குறிப்பிட்ட பங்குகள் கொள்வனவு செய்யப்பட்ட விலை யாதென்பதையும்;

(iv) பங்குகள் யாரிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டன என்பதையும்;

(v) பங்குகள் பின்னர் விற்பனை செய்யப்பட்டிருப்பின், விற்கப்பட்ட நபர்களின் பெயர்களை பங்குத் தொகுதி அடிப்படையிலும்;

(vi) மேற்குறிப்பிடப்பட்ட பங்குகளின் ஒவ்வொரு தொகுதியும் விற்கப்பட்ட விலையையும்;

(vii) இக்கொடுக்கல் வாங்கல்களில் சம்பந்தப்பட்ட தரகர்களின் பெயர்களையும்

அவர் இச்சபைக்கு வெவ்வேறாக அறியத்தருவாரா?

(ஆ) இன்றேல், என்?

2149/ '11

கௌரவ தயாசிறி ஜயசேகர,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தேசிய லொத்தர் சபையினால் வரவு மற்றும் போக்குவரத்து கொடுப்பனவுகளாக 2005 ஆம் ஆண்டிலிருந்து இற்றை வரை நிறுவனத்தின் ஊழியர்களுக்கு செலுத்தப்பட்டுள்ள பணத் தொகை வருடாந்த அடிப்படையில் வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி கொடுப்பனவுகளுக்காக திறைசேரியின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், அதற்கு ஏற்புடைய ஆவணங்களை சபையில் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(iv) திறைசேரியின் அங்கீகாரம் பெறப்படாதிருப்பின் அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(v) மேற்படி கொடுப்பனவுகளுக்கான அங்கீகாரத்தை வழங்கிய நபர் அல்லது நபர்கள் யார் என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2197/ '11

கௌரவ ரவி கருணாநாயக்க,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அமைச்சிலே ஒரு சொத்துப் பதிவுப் புத்தகம் பேணப்படுகின்றதா என்பதையும்;

(ii) அவ்வாறாயின் மேற்குறிப்பிட்ட பதிவுப் புத்தகத்தைப் பேணும் நபரையும்;

(iii) அமைச்சின் தேறிய சொத்தின் பெறுமதி எவ்வளவு என்பதையும்;

(iv) அமைச்சின் மிக முக்கியமான 5 சொத்துக்கள் எவை என்பதையும்

அவர் கூறுவாரா?

(ஆ) (i) சொத்து உறுதிப்படுத்தலின் போது கண்டறியப்பட்ட ஏதாவது கற்பனைச் சொத்துக்கள் அமைச்சிலே உள்ளனவா என்பதையும்;

(ii) அவ்வாறாயின் அச்சொத்துக்களின் பெயர், பெறுமதி போன்றவற்றையும்;

(iii) அச்சொத்துக்கள் தொடர்பான பதிவுகள் பேணப்பட்டுள்ளனவா என்பதையும்

அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2227/ '12

கௌரவ சஜித் பிரேமதாச,— நிர்மாண, பொறியியல் சேவைகள், வீடமைப்பு, பொது வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மஹிந்த சிந்தனை தொலை நோக்குக் கொள்கைகளில் "සැමට නිවසක් - හිතට සෙවණක්" வேலைத் திட்டத்தின் கீழ், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இடம்பெயர்ந்த மக்களை மீள குடியமர்த்துவதற்காக 15,000 வீடுகளை நிர்மாணிக்கும் நிகழ்ச்சித்திட்டமொன்றை துரிதமாக நடைமுறைப்படுத்துவதற்கு நிதி ஒதுக்கப்படுவதாக வாக்குறுதி அளிக்கப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி வாக்குறுதிக்கமைய இன்றளவில் ஒதுக்கப்பட்டுள்ள நிதி எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் இன்றளவில் நிர்மாணிப்புகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ள வீடுகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iii) மேற்படி வீடுகளில் குடியமர்த்தப்பட்டுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2312/ '12

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— உயர் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) தற்போது இலங்கையில் அரச அங்கீகாரத்துடன் இயங்கும் வெளிநாட்டு பல்கலைக்கழகங்களுடன் இணைந்த பட்டப்படிப்பு மற்றும் பட்டப்பின் படிப்பு பட்டங்கள் வழங்கும் தனியார் உயர்கல்வி நிறுவனங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு நிறுவனத்தினதும் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம் மற்றும் பதிவு செய்யப்பட்ட ஆண்டு வெவ்வேறாக யாவையென்பதையும்;

(iii) மேற்படி நிறுவனங்களின் தரத்தை மேற்பார்வை செய்யும் அரச நிறுவனம் யாதென்பதையும்;

(iv) இறுதியாக தர மேற்பார்வை மேற்கொள்ளப்பட்ட ஆண்டு மற்றும் தர மேற்பார்வைக்குட்படுத்தப்பட்ட உயர் கல்வி நிறுவனங்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) அரச அங்கீகாரமின்றி தற்போது இலங்கையில் இயங்கும் பட்டப்படிப்பு மற்றும் பட்டப்பின் படிப்பு பட்டங்கள் வழங்கும் தனியார் உயர் கல்வி நிறுவனங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) மேற்படி நிறுவனங்கள் பதிவினை பெற்றுக்கொள்ள வேண்டிய நிறுவனம் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) 2000 ஆம் ஆண்டு முதல் 2010 ஆம் ஆண்டு வரை உயர் கல்வியை பெறுவதற்கு வெளிநாடுகளுக்கு சென்றுள்ள மாணவர்களின் எண்ணிக்கை மற்றும் வெளிநாடுகளிலிருந்து இலங்கைக்கு புலம்பெயர்ந்துள்ள மாணவர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாவையென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2427/ '12

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) ஸ்ரீ ஜயவர்தனபுர வைத்தியசாலையின் பிரதான உணவகம் குத்தகைக்கு விடப்பட்டுள்ள நிறுவனம் யாதென்பதையும்;

(ii) மேற்படி நிறுவனத்திற்கு வைத்தியசாலையின் உணவகம் குத்தகைக்கு விடப்பட்ட திகதி யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) மேற்படி நிறுவனத்தின் கீழ் நிர்வகிக்கப்படும் வைத்தியசாலை உணவகத்தினால் ஊழியர்களுக்கும் நோயாளிகளுக்கும் சலுகைக் கட்டணத்தில் உணவு, பானங்கள் வழங்கப்படுகின்றன என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) (i) மேற்படி நிறுவனத்தினால் கோதுமை மாவினாலான உணவு வகைகளுக்கு மேலதிகமாக வேறு உணவுகள் வழங்கப்படுகின்றனவா என்பதையும்;

(ii) நீரிழிவு நோயாளிகளுக்காக மேற்படி உணவகத்தினால் வழங்கப்படும் கோதுமை மாவினால் அல்லாத உணவு வகைகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி உணவகத்தினால் நீரிழிவு நோயாளிகளுக்கும் ஏனைய நோயாளிகளுக்கும் வழங்கப்படும் கோதுமை மாவினால் அல்லாத உணவு வகைகள் போதுமானதாக இல்லையென்பதையும்

அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2491/ '12

கௌரவ ரஞ்சன் ராமநாயக்க,— வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு, நலநோம்புகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பஹ்ரேனில் சேவை செய்த, அக்மீமன, ஹியாரே, நுகேகந்த பிரதேசத்தில் வசிக்கும் மூன்று பிள்ளைகளுக்குத் தாயான திருமதி மாதுகெட்ட கமகே தர்மவதீ, இவர் வேலை செய்த வீட்டின் எஜமானிப் பெண் பலவந்தமாக கம்பிக் கொக்கிகளை விழுங்கச் செய்ததன் காரணமாக கடுமையாக நோய்வாய்ப்பட்ட நிலையில் தற்போது இலங்கைக்கு வரவழைக்கப்பட்டுள்ளார் என்பதையும்;

(ii) வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு, நலநோம்புகை அமைச்சின் கீழ் இயங்குகின்ற "சஹன் பியஸ" காப்புறுதி திட்டதிதின் கீழ் இவர் உரித்துரிமைத் தொகையொன்றை கோரியுள்ளார் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) சஹன் பியஸ காப்புறுதித் திட்டத்தின் கீழ் திருமதி தர்மவதீக்கு உரித்துரிமைத் தொகையொன்றை பெற்றுக்கொடுப்பதற்கு தற்போது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை யாதென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2525/ '12

கௌரவ அனுர திஸாநாயக்க,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2011ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31ஆம் திகதியளவில்,

(i) மாகாண சபைகளின் நிருவாகத்தின் கீழ் காணப்பட்ட பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) குறித்த பாடசாலைகளில் காணப்பட்ட ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்

ஒவ்வொரு மாகாண சபைக்கும் ஏற்ப வெவ்வேறாக அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) ஒவ்வொரு மாகாண சபையினதும் கல்வி அமைச்சினூடாக அந்த மாகாண சபையின் கீழ் நிருவகிக்கப்படுகின்ற பாடசாலைகளுக்கென 2012ஆம் ஆண்டுக்கு ஏற்புடையதாக ஒதுக்கப்பட்டுள்ள பணத் தொகைகள் வெவ்வேறாக யாவை என்பதை அவர் இச் சபைக்கு குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2851/ '12

கௌரவ அஜித் பி. பெரேரா,— சமூக சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2000 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க முதியோர் உரிமைகள் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் முதியோர் அடையாள அட்டைகள் வழங்கப்படுமா என்பதையும்;

(ii) மேற்படி அடையாள அட்டையின் பின்புறத்தில் சுகாதார சேவைகள், வங்கிச் சேவைகள், பொலிஸ் மற்றும் சட்ட ஆலோசனைகள் , தபால், ஓய்வூதியம் மற்றும் அலுவலக நடவடிக்கைகள் போன்ற சேவைகளின்போது அடையாள அட்டையின் உரிமையாளருக்கு முன்னுரிமையளிக்கப்படுதல் வேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) மேற்படி முன்னுரிமையைப் பெற்றுக்கொடுப்பதற்காக,

(i) அரசாங்கத்தினால் ஆக்கப்பட்டுள்ள சட்டங்கள் மற்றும் விதிக்கப்பட்டுள்ள ஒழுங்கு விதிகள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி சட்டங்களையும் ஒழுங்குவிதிகளையும் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(iii) இன்றேல், அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) ஆகக் குறைந்தது அரசாங்க ஆஸ்பத்திரியொன்றின் மருத்துவர்களை சந்தித்தல், சிகிச்சை பெறுவதற்கு சமுகமளித்தல் மற்றும் மருந்துகளை பெற்றுக்கொள்ளுதல் போன்ற நடவடிக்கைகளின்போது மூத்த பிரஜைகளுக்கு முன்னுரிமையளிப்பதற்காக சட்ட அதிகாரம் வழங்கப்படுகின்ற சுற்றறிக்கையொன்றை மற்றும்/அல்லது ஒழுங்கு விதியொன்றை கூடிய விரைவில் வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1886/ '11

கௌரவ புத்திக பத்திரண,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) காலி மாவட்டத்தின் அம்பலாங்கொடை வாடிவீடுக்கு சொந்தமான கட்டிடங்களை உடைத்தகற்றி மீள நிர்மாணிப்பதற்காக அடிக்கல் நாட்டப்பட்டு இரண்டு வருடங்கள் கடந்திருந்தும், இற்றைவரை மேற்படி நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்படவில்லை என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி வாடிவீட்டினை மீள நிர்மாணிக்கும் பணிகள் இடைநடுவில் நிறுத்தப்பட்டமைக்கான காரணம் யாதென்பதையும்,

(ii) மேற்படி நிர்மாணப் பணிகளுக்கு நிதி ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(iii) ஆமெனில், ஒதுக்கப்பட்டுள்ள பணத்தொகை யாதென்பதையும்,

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) அம்பலாங்கொடை நகர சபைக்கு சொந்தமான மேற்படி கட்டிடங்களை உடைப்பதற்கு ருகுணு உல்லாசப் பிரயாணக் காரியாலயத்திற்கு எவ்வாறு அதிகாரம் கிடைத்ததென்பதையும்,

(ii) மேற்படி நிர்மாணப் பணிகள் மீள ஆரம்பிக்கப்படுமா என்பதையும்,

(iii) ஆமெனில், அது எப்போதென்பதையும்,

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2150/ '11

கௌரவ தயாசிறி ஜயசேகர,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 1992 ஆம் ஆண்டில் விமான நிலைய, விமானப் போக்குவரத்து அதிகாரசபைக்கு நிதி திரட்டும் பொருட்டு ஆரம்பிக்கப்பட்ட லொத்தர் சீட்டின் பெறுமதி எவ்வளவென்பதையும்;

(ii) தற்போது அச்சிடப்பட்டுள்ள மேற்படி லொத்தர் சீட்டுகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி லொத்தரின் பெயர் யாதென்பதையும்;

(iv) மேற்படி லொத்தர் மூலம் பெறப்பட்ட இலாபம் அல்லது நட்டம் வருடாந்த அடிப்படையில் வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(v) மேற்படி லொத்தர் சீட்டிழுப்பு இடம்பெற்ற திகதி யாதென்பதையும்;

(vi) அதன் கீழ் பகிர்ந்தளிக்கப்பட்ட பரிசுகள் யாவையென்பதையும்;

(vii) மேற்படி லொத்தர் சீட்டு ஆரம்பிக்கப்பட்டதன் மூலம் எதிர்பார்க்கப்பட்ட இலக்கு தற்போது நிறைவுசெய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(viii) ஆமெனில், அதனுடன் தொடர்புடைய தகவல்களை சமர்ப்பிப்பாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2198/ '11

கௌரவ ரவி கருணாநாயக்க,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) அமைச்சிலே ஒரு சொத்துப் பதிவுப் புத்தகம் பேணப்படுகின்றதா என்பதையும்;

(ii) அவ்வாறாயின் மேற்குறிப்பிட்ட பதிவுப் புத்தகத்தைப் பேணும் நபரையும்;

(iii) அமைச்சின் தேறிய சொத்தின் பெறுமதி எவ்வளவு என்பதையும்;

(iv) அமைச்சின் மிக முக்கியமான 5 சொத்துக்கள் எவை என்பதையும்

அவர் கூறுவாரா?

(ஆ) (i) சொத்து உறுதிப்படுத்தலின் போது கண்டறியப்பட்ட ஏதாவது கற்பனைச் சொத்துக்கள் அமைச்சிலே உள்ளனவா என்பதையும்;

(ii) அவ்வாறாயின் அச்சொத்துக்களின் பெயர், பெறுமதி போன்றவற்றையும்;

(iii) அச்சொத்துக்கள் தொடர்பான பதிவுகள் பேணப்பட்டுள்ளனவா என்பதையும்

அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2228/ '12

கௌரவ சஜித் பிரேமதாச,— நிர்மாண, பொறியியல் சேவைகள், வீடமைப்பு, பொது வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மஹிந்த சிந்தனை தொலை நோக்குக் கொள்கைகளில், "සැමට නිවසක් - හිතට සෙවණක්" வேலைதிட்டத்தின் கீழ், வீடுகளை இழந்த அனைவருக்கும் எதிர்வரும் ஆறு வருடங்களினுள் தமக்கான ஒரு வீட்டின் உரிமையினை வழங்குவதற்கென, அரசின் முழுமையான தலையீட்டுடன் புதிதாக ஆறு இலட்சம் வீடுகளை நிர்மாணிப்பதற்கான திட்டங்கள் வகுக்கப்படுமென வாக்குறுதி அளிக்கப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) தற்போது மேற்குறிப்பிடப்பட்ட திட்டங்கள் செயற்படுத்தப்படுகின்றனவா;

(ii) ஆமெனில், தற்போது வீடுகள் கிடைக்கப்பெற்ற குடும்பங்களின் எண்ணிக்கை யாது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2526/ '12

கௌரவ அனுர திஸாநாயக்க,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இந்நாட்டில், 2011ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31ஆம் திகதியளவில் காணப்பட்ட தேசிய பாடசாலைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) தேசிய பாடசாலைகளுக்கென 2012 ஆண்டின் பொருட்டு ஒதுக்கப்பட்ட மொத்தப் பணத் தொகை யாதென்பதையும்;

(iv) தற்போது அதிபர்களுக்கான வெற்றிடங்கள் காணப்படுகின்ற தேசிய பாடசாலைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(v) தேசிய பாடசாலைகளில் முதலாம் தரத்தில் சேர்வதற்காக 2011 மற்றும் 2012ஆம் ஆண்டுகளில் விண்ணப்பித்திருந்த மாணவர்களின் எண்ணிக்கை;

(vi) விண்ணப்பித்திருந்தவர்களின் எண்ணிக்கையில் மேற்படி பாடசாலைகளுக்குச் சேர்த்துக்கொள்ளப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

## 2012 ஒற்றோபர் 25, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1887/ '11

கௌரவ புத்திக பத்திரன,— நீர் வழங்கல், வடிகாலமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) கேகாலை மாவட்டத்தின் தெஹியோவிற்ற பிரதேச சபை ஆளுகைப் பிரதேசத்திலுள்ள அல்கொட மல்வருஷா திம்பிரிபொல பிரவென வீதியில் அமைந்துள்ள வீடுகளுக்கு வழங்கப்படுகின்ற நீர் பற்றாக்குறையாகவிருப்பதனால் இப்பிரதேச மக்கள் பெரும் அசௌகரியத்திற்கு உள்ளாகியுள்ளனர் என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) இந்நிலைமைக்கு தாக்கத்தை ஏற்படுத்தியுள்ள காரணங்கள் யாவையென்பதையும்;

(ii) தாக்கத்தை ஏற்படுத்தியுள்ள இக்காரணங்களை நிவர்த்தி செய்து துரிதமாக நீர்வழங்கலை சீர்செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதையும்;

(iii) ஆமெனில், அதற்கு எவ்வளவு காலம் எடுக்குமென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2027/ '11

கௌரவ சஜித் பிரேமதாச,— சிறுவர் அபிவிருத்தி மகளிர் அலுவல்கள் அமைச்சரைக் கேட்டபதற்கு,— (3)

(அ) (i) தற்போது முறைசாரா மற்றும் தவறான வழிகளில் பெண்கள் மற்றும் சிறுவர்கள் வீட்டுப் பணிகள் , சிறு பிள்ளைகளைப் பேணல், மற்றும் வீட்டுத் தோட்டப் பராமரிப்பு ஆகிய தொழில்களில் ஈடுபடுத்தப்படுவதையும்;

(ii) இவ்வாறு பணியில் ஈடுபடும் சிறுவர்கள் மற்றும் பெண்கள் பெரும்பாலும் பல்வேறு சித்திரவதைகளுக்கு உள்ளாகின்றனர் என்பதையும்

அவர் ஏற்றுக் கொள்வாரா?

(ஆ) (i) மேற்கூறியவாறு சிறுவர்கள், மற்றும் பெண்கள் சித்திரவதைகளுக்கு உள்ளாவதை ஒழிக்கும் பொருட்டும், ஊழியர்கள் மற்றும் தொழில் வழங்குனர்கள் ஆகிய இரு தரப்பினருக்கும் நன்மையாக அமையும் பொருட்டும், மேற்கூறிய தொழில்களை எதிர்பார்ப்பவர்களை பதிவு செய்யக்கூடியவாறான முறைசார்ந்த முறையியலொன்றுடன் கூடிய நிறுவனமொன்றை தாபிப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) தாபிக்கப்படும் அவ்வாறான நிறுவனமொன்றில் பதிவு செய்யப்பட்டவர் களுக்கு மாத்திரம் மேலே (அ) i இல் குறிப்பிட்டவாறான தொழில்களை முறைசார்ந்த விதத்தில் பெற்றுக் கொடுப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வாரா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2151/ '11

கௌரவ தயாசிறி ஜயசேகர,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2007ஆம் ஆண்டில் வீரவில விமான நிலைய நிதிய சேகரிப்புக்காக ஆரம்பிக்கப்பட்ட லொத்தர் சீட்டின் பெறுமதி யாது;

(ii) தற்போது அச்சிடப்பட்டுள்ள மேற்படி லொத்தர் சீட்டுகளின் எண்ணிக்கை யாது;

(iii) குறித்த லொத்தர் சீட்டின் பெயர் யாது;

(iv) குறித்த லொத்தர் மூலம் பெறப்பட்ட இலாபம் அல்லது நட்டம் வருடாந்த ரீதியில் வெவ்வேறாக யாது;

(v) குறித்த லொத்தர் சீட்டிழுப்பு இடம்பெற்ற திகதி யாது;

(vi) இதன் கீழ் பகிர்ந்தளிக்கப்பட்ட பரிசுகள் யாவை;

(vii) மேற்படி லொத்தரைப் பேணிவரும் பொருட்டு விமான நிலைய, விமான சேவைகள் கம்பனிக்கு லொத்தர் சபையினால் வருடாந்தம் செலுத்தப்பட்ட குத்தகை அல்லது வாடகைத் தொகை வருடாந்த ரீதியில் வெவ்வேறாக யாது;

(viii)இந்த லொத்தரை ஆரம்பித்ததன் மூலம் எதிர்பார்க்கப்பட்ட இலக்குகள் தற்போது நிறைவடைந்துள்ளனவா;

(ix) ஆமெனில், அது குறித்த விபரங்களை சமர்ப்பிப்பாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2199/ '11

கௌரவ ரவி கருணாநாயக்க,— கால்நடை வளர்ப்பு கிராமிய சனசமூக அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) வரையறுக்கப்பட்ட மில்கோ (MILCO) தனியார் நிறுவனம் தொடர்பாக கடந்த 4 ஆண்டுகளில்,

(i) ஏற்பட்ட இலாபம் அல்லது நட்டத்தையும்;

(ii) அந்த நிறுவனத்தில் வேலை செய்யும் பணியாட்டொகுதியினரின் எண்ணிக்கை மற்றும் இலாம், ஒரு ஊழியருக்கான செலவு ஆகியவற்றையும்;

(iii) அரசாங்கத்திற்கு செலுத்தப்பட்ட விதிப்பனவுகளையும் தீர்வுகளையும்

அவர் கூறுவாரா?

(ஆ) (i) இற்றை வரை வரையறுக்கப்பட்ட மில்கோ (MILCO) தனியார் நிறுவனத்தில் பயன்படுத்தப்பட்ட மூலதனம் மற்றும் ஒதுக்கங்களையும்;

(ii) இந்நிறுவனத்திற்கு வழங்கப்படும் உர மானியம் அரசாங்கத்துக்கு எவ்வாறு மீளளிப்புச் செய்யப்படுகின்றது என்பதையும்

அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2527/ ’12

கௌரவ அனுர திஸாநாயக்க,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சிறந்த பாடசாலைகள் கருத்திட்டத்திற்காக 2012ஆம் ஆண்டு சனவரி மாதம் 31ஆம் திகதியளவில் தெரிவு செய்யப்பட்டிருந்த பாடசாலைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக 2012ஆம் ஆண்டில் செலவிட எதிர்பார்க்கப்பட்டுள்ள பணத் தொகை யாதென்பதையும்;

(iii) தற்போது மேற்படி நிதி ஏற்பாடு கிடைக்கப்பெற்றுள்ள விதம் யாதென்பதையும்;

(iv) 2012 ஆண்டில் கடந்துள்ள முதல் காலாண்டுப்பகுதியில் சிறந்த பாடசாலைகளாக தெரிவு செய்யப்பட்டுள்ள ஒவ்வொரு பாடசாலைக்குமென வழங்கப்பட்டுள்ள பணத் தொகை வெவ்வேறாக யாதென்பதையும்

அவர் இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2548/ ’12

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— பிரதம அமைச்சரும் பௌத்தசாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2009இலிருந்து இற்றைவரை இலங்கைப் பொலீசுக்குக் கிடைத்துள்ள வன்புணர்ச்சி, பாலியல் துஷ்பிரயோகம் மற்றும் சிறுவர் துஷ்பிரயோக முறைப்பாடுகளின் எண்ணிக்கை மாவட்ட மட்டத்தில் தனித்தனியாக எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி முறைப்பாடுகளில் தற்போது விசாரணைகள் நிறைவு செய்யப்பட்டுள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2781/ ’12

கௌரவ அஜித் பி.பெரேரா,— வெகுசன ஊடக, தகவல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2012.05.01ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற ஒன்றிணைந்த எதிர்க்கட்சிகளின் மே தினக் கூட்டத்தின்போது புலிகள் அமைப்புக்கு உரிய கொடியொன்றை குறிப்பிட்ட ஒரு நபர் ஏந்தியிருக்கும் படத்தைக் கொண்ட ஒரு செய்தி சுயாதீன தொலைக்காட்சிச் சேவையில் ஒளிபரப்பப்பட்டதா;

(ii) சுயாதீன தொலைக்காட்சிச் சேவையைச் சார்ந்த ஒரு ஊடகவியலாளரினால் அல்லது ஒரு குழுவினால் குறிப்பிட்ட மே தின ஊர்வலம் ஒளிப்பதிவு செய்யப்பட்டதா;

(iii) இல்லையெனில், புலிகள் அமைப்புக்குரித்தான கொடியொன்றை ஏந்தியிருக்கும் படத்தைக் கொண்ட ஒளிநாடாவை சுயாதீன தொலைக்காட்சி சேவைக்கு வழங்கிய நபர் யார்

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) சுயாதீன தொலைக்காட்சிச் சேவையினால்,

(i) மேற்குறிப்பிடப்பட்ட ஒளிநாடாவின் போலியற்றதன்மை அல்லது உண்மைத்தன்மை எவ்வாறு உறுதி செய்யப்பட்டது;

(ii) மேற்குறிப்பிடப்பட்ட காட்சிகளை உள்ளடக்கிய படம் எத்தனை தடவைகள் ஒளிபரப்புச் செய்யப்பட்டது;

(iii) மேற்குறிப்பிடப்பட்ட காட்சிகள் ஒளிபரப்புச் செய்யப்பட்ட திகதிகள் மற்றும் நேரங்கள் யாவை

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1888/ '11

கௌரவ புத்திக பத்திரண,— தேசிய மரபுரிமைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாத்தறை மாவட்டத்தின் திக்வெல்ல பிரதேச சபை ஆளுகைப் பிரதேசத்தில் அமைந்துள்ள திக்வெல்ல குமாரதுங்க பொது நூதனசாலைக்காக நிர்மாணிக்கப்பட்ட கட்டிடம் தற்போது அழிவடைந்து வருகின்றதென்பதையும்;

(ii) மேற்படி கட்டிடத்தின் நிர்மாணப்பணிகள் உரிய தரத்தில் மேற்கொள்ளப்படவில்லையென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி கட்டிடத்தை புனரமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதையும்;

(ii) ஆமெனில், இப்பணிகள் எத்திகதியில் ஆரம்பிக்கப்படும் என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2152/ '11

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பிரதம அமைச்சரும், பௌத்த சாசன மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2011ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 25ஆம் திகதி நடைபெற்ற ஸ்ரீபாத விகாரையின் தலைமைத் தேரரைத் தெரிவதற்கான தேர்தலில் போட்டியிட்ட பிக்குமார்களின் பெயர்கள் யாவை;

(ii) இதில் வாக்களிக்கும் உரிமையுள்ள, வாக்காளர் தேரர்களின் எண்ணிக்கை யாது;

(iii) வாக்களிப்பதற்கு இல்லறத்தினருக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்ததா

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) வாக்காளர் தேரர்களை பலவந்தமாக கடத்திச் செல்லுதல் அல்லது வாக்குச் சாவடிக்கு வரும் தேரர்களுக்கு இடையூறு விளைவித்தல் இடம்பெற்றுள்ளதா;

(ii) ஆமெனில், இதில் சம்பந்தப்பட்டவர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனரா;

(iii) இவர்கள் தொடர்பில் எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை;

(iv) மேற்படி தேர்தல் தொடர்பில் அரசாங்க அமைச்சர்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகளுக்கு ஏதேனும் கடமைப் பொறுப்புகள் ஒப்படைக்கப்பட்டிருந்ததா

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) ஒவ்வொரு பிறவியிலும் தொடர்ந்துவரும் ஓர் பாபகாரியமான (ஆனந்தரீய பாபகர்மய) பிக்குகளின் பிரிவினைக்கு, வழிவகுக்கும் சம்பவங்கள் குறிப்பிட்ட காலப் பகுதியில் இடம்பெற்றன என்பதை ஏற்றுக்கொள்வாரா;

(ii) ஆமெனில், அது தொடர்பில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை;

(iii) எதிர்காலத்தில் இவ்வாறானவை இடம்பெறாமலிருக்க மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2200/ '11

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நிதி, திட்டமிடல் அமைச்சில் சொத்துகள் பதிவு இடாப்பு ஒன்று பேணப்படுகின்றதா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், மேற்குறிப்பிட்ட பதிவு இடாப்பினைப் பேணும் நபர் யார் என்பதையும்;

(iii) அமைச்சின் தேறிய சொத்துப் பெறுமதி யாதென்பதையும்;

(iv) அமைச்சிலுள்ள 5 மிக முக்கியமான சொத்துகள் யாவை என்பதையும்

அவர் கூறுவாரா?

(ஆ) (i) சொத்துக்களின் உறுதிப்படுத்தல் மூலம் கற்பனைச் சொத்துகள் எவையாவது அமைச்சில் கண்டுபிடிக்கப்பட்டனவா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், அச்சொத்துகளின் பெயர்கள் மற்றும் பெறுமதிகள் யாவையென்பதையும்;

(iii) அச்சொத்துகள் தொடர்பான பதிவுகள் மேற்கொள்ளப்பட்டனவா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2230/ '12

கௌரவ சஜித் பிரேமதாச,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2005 – 2010ஆம் ஆண்டு காலப் பகுதியினுள் நாட்டினுள் மூடப்பட்ட அரசாங்க பாடசாலைகளின் எண்ணிக்கை யாது;

(ii) போதுமான வளங்கள் கிடைக்கப்பெறாமையே பாடசாலைகள் மூடப்பட்டமைக்கான பிரதானமான காரணம் என்பதை ஏற்றுக்கொள்வாரா;

(iii) இன்றேல், மேற்படி பாடசாலைகள் மூடப்பட்டமைக்கான காரணங்கள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2529/ ’12

கௌரவ அனுர திஸாநாயக்க,— உயர் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பல்கலைக்கழக மாணவர்களுக்கு மடிக்கணனி வழங்கும் கருத்திட்டமொன்று உயர் கல்வி அமைச்சினால் செயற்படுத்தப்படுகின்றதா என்பதையும்;

(ii) மேற்படி கணனி வழங்குவதற்காக மாணவர்களை தெரிவு செய்யும் அளவீடுகள் யாவையென்பதையும்;

(iii) இதுவரை மடிக்கணனிகள் வழங்கப்பட்டுள்ள மாணவர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iv) ஏனைய பல்கலைக்கழக மாணவர்களுக்கும் மடிக்கணனி வழங்குவதற்கு எவ்வளவு காலம் எடுக்கும் என்பதையும்;

(v) அதற்காக செலவாகுமென எதிர்பார்க்கப்பட்டுள்ள மொத்தப் பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(vi) மேற்படி பணத் தொகையை திரட்டும் பொருட்டு வகுக்கப்பட்டுள்ள வேலைத்திட்டம் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2554/ ’12

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2009 மே 30 ஆம் திகதிக்கு பின்னர் இலங்கை விமானப் படைக்கு விமானங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) ஆமெனில் கொள்வனவு செய்யப்பட்டுள்ள விமானங்களின் எண்ணிக்கை ஒவ்வொரு வகைக்கு ஏற்ப தனித்தனியாக யாதென்பதையும்;

(iii) மேற்படி கொள்வனவுகளின் போது கேள்விப்பத்திர நடைமுறை பின்பற்றப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில் அதற்காக கேள்விப்பத்திரங்களை முன்வைத்துள்ள கம்பனிகள் யாவையென்பதையும்;

(v) அந்த ஒவ்வொரு கம்பனியினாலும் முன்வைக்கப்பட்டுள்ள விலைகள் யாவையென்பதையும்;

(vi) விமானங்களை கொள்வனவு செய்வதற்காக மேற்படி நிறுவனங்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட அடிப்படை யாதென்பதையும்;

(vii) மேற்படி விமானங்களை கொள்வனவு செய்வதற்காக செலவிடப்பட்டுள்ள மொத்தப் பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(viii) அத்தகைய எண்ணிக்கையிலான விமானங்களை கொள்வனவு செய்வதற்கான காரணம் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2853/ ’12

கௌரவ அஜித் பி. பெரேரா,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இந்தியாவின் தமிழ் நாடு மாநிலத்தில் கண்ணியக்குமாரி மாவட்டத்தில் கூடம்குழம் அணுமின் உற்பத்தி நிலையமொன்றுக்கான (Kudankulam Nuclear Power Plant) கருத்திட்டமொன்று நடைமுறையிலிருப்பதை அவர் அறிவாரா?

(ஆ) அந்த அணுமின் உற்பத்தி நிலையத்தின்,

(i) கொள்வனவு எவ்வளவு என்பதையும்;

(ii) இலங்கையின் கடல் எல்லைக்கான தூரம் எவ்வளவு என்பதையும்;

(iii) அமைவிடத்திலிருந்து இலங்கையின் நிலப்பரப்புக்கான தூரம் எவ்வளவு என்பதையும்;

(iv) அமைவிட மதிப்பீட்டு அறிக்கை (Site Evaluation Study Report) இலங்கை அரசுக்குக் கிடைத்துள்ளதா என்பதையும்;

(v) பாதுகாப்பு பகுப்பாய்வு அறிக்கை (Safety Analysis Report) இலங்கை அரசுக்குக் கிடைத்துள்ளதா என்பதையும்;

(vi) மேற்கூறிய அறிக்கைகளை சபையில் சமர்ப்பிப்பாரா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) மேற்கூறிய மின் உற்பத்தி நிலையம் காரணமாக இலங்கையின் சுற்றாடலுக்கு ஏற்படக் கூடிய தாக்கம் தொடர்பாக இலங்கை அரசு இதுவரை மேற்கொண்டுள்ள கற்கைகள் யாவையென்பதையும்;

(ii) அந்தக் கற்கைகளின் அறிக்கைகளை சபையில் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(iii) மேற்கூறிய அணுமின் உற்பத்தி நிலையம் காரணமாக இலங்கையின் சுற்றாடலுக்கு ஏற்படக்கூடிய பாதிப்புக்களை தடுப்பதற்கு இலங்கை அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2232/ ’12

கௌரவ சஜித் பிரேமதாச,— கமநல சேவைகள், வனசீவராசிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2011ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்தி (திருத்தச்) சட்டத்தின் ஊடாக வாரக்குடி விவசாயியின் வாரக்குடி உரிமையைப் பாதுகாத்தல் எதிர்பார்க்கப்பட்ட போதிலும், தற்போதுகூட வாரக்குடி உரிமையை இழக்கச் செய்கின்றதான பல நடவடிக்கைகள் செயற்படுவதனை அவர் அறிவாரா?

(ஆ) ஆமெனில், இக்குறைபாட்டினைத் தவிர்த்துக் கொள்ளும் முகமாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?